2025
ஓகத்து

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்

## கட்டடவாக்கம்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**கட்டடவாக்கத்திற்கான இலங்கை கொள்வனவு முகாமையாளர்களின் சுட்டெண் (கொ.மு.சு - கட்டடவாக்கம்), மொத்த நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2025 ஓகத்தில் கட்டடவாக்க நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவாக்கமொன்றைக் காண்பித்து, 61.1 ஆக அதிகரித்தது.** பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டதற்கமைய, தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட சில கருத்திட்டங்கள் மீளத்தொடங்கப்பட்டதுடன் கருத்திட்டம் கிடைக்கப்பெறுவதில் தொடர்ச்சியான அதிகரிப்பு, கட்டுமானத் துறையின் நம்பிக்கையை வலுப்படுத்தியுள்ளது.

ஓகத்தில் புதிய கட்டளைகள் சுட்டெண்ணும் அதிகரித்தது. அளவீட்டு பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டதற்கமைய, வீதி அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் பணி மாத காலப்பகுதியில் மிகவும் பொதுவாக வழங்கப்பட்ட கருத்திட்ட வகைகளாக காணப்பட்டன. ஓகத்தில், கட்டடவாக்கப் பணியில் தொடர்ச்சியான வளர்ச்சிக்கான சாதகமான எண்ணப்பாங்கைக் காண்பித்து தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் அளவுச் சுட்டெண்கள் இரண்டும் அதிகரித்தன. அதேவேளை, கட்டடவாக்கப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்ததன் மூலம் உந்துதளிக்கப்பட்டு நிரம்பலர் விநியோக நேரம் இம்மாத காலப்பகுதியில் மேலும் நீட்சியடைந்தது.

**கொ.மு. சுட்டெண் தொகுப்பு - கட்டடவாக்க அளவீடு**

| மாறி | யூலை | ஓகத்து | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – கட்டடவாக்கம் (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)** | **60.0** | **61.1** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.6 | 59.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில |
| தொழில்நிலை | 50.0 | 52.8 | + | நடுநிலையிலிருந்து அதிகரிப்பு |
| கொள்வனவுகளின் அளவு | 52.9 | 58.3 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 51.4 | 52.8 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

கட்டடவாக்கத் துறையின் தோற்றப்பாடு புதிய கருத்திட்ட வாய்ப்புகளில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பின் மூலம் துணையளிக்கப்பட்டு சாதகமாகவிருக்குமென எறிவுசெய்யப்படுகின்றது.

**கொமுசு**
**கட்டடவாக்கம்**
**மொத்த நடவடிக்கைச் சுட்டெண்**
**2025 ஓகத்து**
**61.1**

கட்டடவாக்க கொ.மு.சு (மொத்த நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு:**
**கொமுசு கட்டடவாக்கத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| பிரான்ஸ் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| ஜேர்மனி | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| அயர்லாந்து | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| இத்தாலி | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2025 செத்தெம்பர் 30 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**முறையியல்**
சுட்டெண் தொகுப்பும் சுட்டெண்கள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண் என்பது பன்னாட்டு சிறந்த நடத்தைகளின் பிரகாரம் **கொமுசு – கட்டடவாக்கம்** என குறிப்பீடு செய்யப்படுகின்ற கட்டடவாக்கத்திற்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். கட்டடவாக்க மொத்த நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண் மற்றும் பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பவற்றுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**
மாதத்திற்கு மாத அபிவிருத்திகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏறத்தாழ 35 பதிலிறுப்பாளர்களை உள்ளடக்கி நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவுசெய்த அதிகூடிய தரமிடப்பட்ட உள்நாட்டு கட்டடவாக்கக் கம்பனிகளை இலக்காகக் கொண்டு அளவீடு நடாத்தப்படுகின்றது.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் அளவு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.